தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

# செய்தி மடல்

செய்தி 15 மடல் 6 ஜூன் – 2015 ₹1.00

## மாண்புமிகு மத்திய வேளாண் அமைச்சரின் ஆய்வுக் கூட்டம்



மாண்புமிகு மத்திய வேளாண் அமைச்சர் திரு. ராதா மோகன் சிங் அவர்கள் தலைமையில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தமிழ்நாடு அரசின் வேளாண்மைத் துறை, கூட்டுறவுத் துறை மற்றும் கால்நடைப் பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறைகளின் செயலர்கள் மற்றும் தமிழ்நாட்டில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் நிலையங்கள், வேளாண் அறிவியல் நிலையங்கள், வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பிரதிநிதிகள் பங்கேற்ற ஆய்வுக் கூட்டம் சென்னை, மத்திய உவர்நீர் ஆராய்ச்சிக் கழகத்தில் 09.05.2015அன்று நடைபெற்றது. பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் ஆய்வுக் கூட்டத்தில் பங்கேற்று, பல்கலைக்கழகத்தின் பல்வேறு செயல்பாடுகளை எடுத்துரைத்தார்.

## சிட்டகாங் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்திற்குத் துணைவேந்தர் வருகை




தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் பங்களாதேஷ், சிட்டகாங்கில் உள்ள சிட்டகாங் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்திற்கு வருகைபுரிந்து, அப்பல்கலைக்கழகத்தின் பல்வேறு நிகழ்ச்சிகளில் 25.04.2015முதல் 27.04.2015வரை பங்கேற்றார். அவரின் வருகை, சிகிச்சையியல் பயிற்சி மற்றும் கால்நடை மருத்துவ மனித வள மேம்பாடு ஆகியவற்றில் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்திற்கும் சிட்டகாங் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்திற்கும் இடையேயான உறவை வலுப்படுத்தும் நோக்கில் அமைந்திருந்தது. மேலும், சிட்டகாங் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தில் உள்ள பயிற்சி மருத்துவமனையை மேம்படுத்துவதற்கும், கால்நடை நலம் மற்றும் சிகிச்சையியல் பயிற்சிப் புலங்களில் கல்வி மற்றும் ஆராய்ச்சியை மேம்படுத்துவதற்கும் துணைவேந்தர் அவர்கள் கருத்துரை வழங்கினார். அவர் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று "பொருளியல் அடிப்படையிலான அறிவு மேம்பாடு: கால்நடை–மீன்வளம்–உணவுத் தொழிலின் பங்கு" குறித்த 12ஆவது ஆண்டு அறிவியல் கருத்தரங்கை 26.04.2015அன்று துவக்கிவைத்து, உரையாற்றினார். அவர் தமது துவக்கவுரையில் கால்நடை மருத்துவர்கள் தமது அன்றாடப் பணிகளோடு, பண்ணை விலங்குகளின் உற்பத்தியை அதிகப்படுத்தல் மற்றும் பொதுச் சுகாதார மேம்பாட்டின்மூலமும், விலங்குவழிப் பரவும் நோய்களைக் கட்டுப்படுத்தித் தடுத்தல்மூலமும் உணவுப் பாதுகாப்பை உறுதிபடுத்த வேண்டும் என்று வலியுறுத்தினார். "கால்நடை உற்பத்திப் பொருட்களை முன்வைத்து உணவுப் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்புச் சிக்கல்கள் – ஒரு முழுப் பார்வை" என்ற ஆய்வுக் கட்டுரையையும் வழங்கினார். துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள், 25.04.2015அன்று கொண்டாடப்பட்ட உலகக் கால்நடை மருத்துவ தினத்தில் பங்கேற்று, "விலங்கிலிருந்து மனிதனுக்குப் பரவும் நோய்களை முன்வைத்து நோய்நுண்மப் பரப்பிகள்" குறித்த விழிப்புணர்வுப் பேரணியைக் கொடியசைத்துத் துவக்கிவைத்தார். மேலும், சிட்டகாங் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத் துணைவேந்தர், முதல்வர்கள் மற்றும் இயக்குநர்கள், உணவு மற்றும் வேளாண் அமைப்பின் ஆலோசகர் டாக்டர் நிதிஷ் சி. தீப்நாத் ஆகியோருடனான கலந்துரையாடலிலும் பங்கேற்றார். சிட்டகாங் கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகத்தின் பல்வேறு பிரிவுகளைப் பார்வையிட்ட துணைவேந்தர், கால்நடை ஈனியல் மற்றும் இனப்பெருக்கவியலில் பயிற்சி நடத்துவதற்கு வழிவகுத்தார்.

## 24ஆவது மருத்துவமனை மேலாண்மைக் குழுக் கூட்டம்

24ஆவது மருத்துவமனை மேலாண்மைக் குழுக் கூட்டம், பல்கலைக்கழகத்தின் சிகிச்சையியல் இயக்குநரகம்மூலம் திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 07.05.2015அன்று நடைபெற்றது. பல்கலைக்கழகத்தின்



துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை வகித்து, சிறப்புரை ஆற்றி, சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் சிகிச்சைத் துறை மற்றும் மையச் சிகிச்சையியல் ஆய்வகத்தின் பொதுவான இயக்க முறைகள் குறித்த குறுந்தகடு வெளியிட்டு, மருத்துவமனைப் பணிகள் மேம்படுவதற்கான கருத்துரை வழங்கினார். பல்கலைக்கழகத்தின் முன்னாள் சிகிச்சையியல் இயக்குநர் முனைவர் கே. அமீர்ஜான், திருநெல்வேலி, கால்நடைப் பராமரிப்புத் துறையின் இணை இயக்குநர் டாக்டர் சி. செங்கராஜ், டிவிஎஸ் அறக்கட்டளையின் திரு. இ. முருகன், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் ஓய்வுபெற்ற பேராசிரியர் முனைவர் டி.என். பாலசுப்பிரமணியன், அப்பேலோ மருத்துவமனையின் சிறுநீரகவியல் ஆலோசகர் டாக்டர் ராஜா மகேஷ், தமிழ்நாடு மின்சார வாரியத்தின் பொறியாளர் திரு. உமாசங்கர் ஆகியோர் பங்கேற்றுக் கருத்துரை வழங்கினர். சிகிச்சையியல் இயக்குநர்(பொ.) முனைவர் டி.என். கணேஷ் அவர்கள் பல்வேறு பயிற்சி மருத்துவமனைகளின் சிகிச்சையியல் பணியாளர்களின் பணியை எடுத்துரைத்தார். திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் முதல்வர் முனைவர் சே. பிரதாபன் அவர்கள் நன்றியுரை ஆற்றினார்.

## சுய நிதி மற்றும் சுழல் நிதித் திட்டங்களின் ஆய்வுக் கூட்டம்




சென்னை (31 திட்டங்கள்) மற்றும் சென்னைக்கு அருகில் (21 திட்டங்கள்) அமைந்துள்ள தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் பல்வேறு பிரிவுகளில் இயங்கிவரும் சுய நிதி மற்றும் சுழல் நிதித் திட்டங்களின் ஆய்வுக் கூட்டம் 23.04.2015 மற்றும் 16.05.2015ஆம் தேதிகளில் முறையே சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நடைபெற்றது. பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். கூட்டத்தில் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி இயக்குநர், அடிப்படை அறிவியல் புல முதல்வர், சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர், தொலைநிலைக் கல்வி இயக்குநர், நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர், கால்நடை நலக் கல்வி மைய இயக்குநர், கால்நடை உற்பத்திக் கல்வி மைய இயக்குநர், ஒசூர் கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மைக் கல்லூரி முதல்வர் ஆகியோர் பங்கேற்று, திட்டங்களை ஆய்வு செய்தனர். இவ் ஆய்வின் போது திட்டப் பொறுப்பு அதிகாரிகளுக்குத் தகுந்த வழிகாட்டுதல்களும் குறிப்புகளும் வழங்கப்பட்டன.

## துணைவேந்தர் ஆய்வு

பல்கலைக்கழகத்தின் கால்நடை உற்பத்திக் கல்வி மையத்தின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் பல்வேறு ஆராய்ச்சி நிலையங்களின் ஆய்வுக் கூட்டம், சாந்திநல்லா செம்மறியாடு இனப்பெருக்க ஆராய்ச்சி நிலையத்தில் 08.05.2015அன்று நடைபெற்றது. பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் சாந்திநல்லா செம்மறியாடு இனப்பெருக்க ஆராய்ச்சி நிலையம், பொட்டனேரி, மேச்சேரி ஆடு ஆராய்ச்சி நிலையம், புதுக்கோட்டை மண்டல ஆராய்ச்சி மையம், காட்டுப்பாக்கம், கால்நடை ஊட்டச்சத்து நிலையம், கால்நடை அறிவியல் முதுநிலை ஆராய்ச்சி நிலையம் மற்றும் மையத் தீவன உற்பத்திப் பிரிவு, மாதவரம், கோழியின ஆராய்ச்சி நிலையம் மற்றும் பல்கலைக்கழக ஆராய்ச்சிப் பண்ணை ஆகியவற்றின் தலைவர்கள் அளித்த நிலையச் செயல்பாடுகளை ஆய்வுசெய்தார். மேலும், நிலைய மேம்பாட்டிற்குப் பயனுள்ள கருத்துரைகள் வழங்கினார்.

## வேளாண் அறிவியல் தமிழ் இயக்கம்

**நாமக்கல் கிளையகம்:** வேளாண் அறிவியல் தமிழ் இயக்கத்தின் நாமக்கல் கிளையகம் 25.05.2015 அன்று நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் துவக்கப்பட்டது. வேளாண் அறிவியல் தமிழ் இயக்கத்தின் நிறுவனர் மற்றும் தலைவர் மற்றும் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் முதுநிலை அறிவியலார் முனைவர் மு. முத்தமிழ்ச்செல்வன் அவர்கள் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று, நாமக்கல் கிளையகத்தைத்




துவக்கிவைத்து, நோக்கவுரை ஆற்றினார். வேளாண் அறிவியல் தமிழ் இயக்கத்தின் நாமக்கல் கிளையகக் கவுரவ தலைவர் மற்றும் நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் முதல்வர் முனைவர் இல. குணசீலன் அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்து, தலைமையுரை ஆற்றினார். வேளாண் அறிவியல் தமிழ் இயக்கத்தின் நாமக்கல் தலைவர், சிகிச்சைத்துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் மா. செல்வராசு அவர்கள் அறிமுகவுரை ஆற்றினார்.

**திருநெல்வேலி கிளையகம்:** வேளாண் அறிவியல் தமிழ் இயக்கத்தின் திருநெல்வேலி கிளையகம் 26,05.2015 அன்று திருநெல்வேலி கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் இராமையன்பட்டி வளாகத்தில் துவக்கப்பட்டது. கல்லூரி முதல்வர் முனைவர் சே. பிரதாபன் அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்து, தலைமையுரை ஆற்றினார். வேளாண் அறிவியல் தமிழ் இயக்கத்தின் நிறுவனர் மற்றும் தலைவர் மற்றும் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் முதுநிலை அறிவியலார் முனைவர் மு. முத்தமிழ்ச்செல்வன் அவர்கள் வேளாண் அறிவியல்



தமிழ் இயக்கத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். வேளாண் அறிவியல் தமிழ் இயக்கத்தின் திருநெல்வேலி தலைவர், கால்நடை உற்பத்தி மேலாண்மைத் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் எஸ்.சி. எட்வின் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார்.

**ஒரத்தநாடு கிளையகம்:** ஒரத்தநாடு கால்நடை மருத்துவக் கல்லூரியில் வேளாண் அறிவியல் தமிழ் இயக்கத்தின் கிளையகம் 27.05.2015 அன்று துவக்கப்பட்டது. கிளையகத்தினைக் கிளை மதிப்புறு தலைவர் மற்றும் கல்லூரி முதல்வர் முனைவர் க.ந.



செல்வக்குமார் அவர்கள் துவக்கி வைத்தார். இவ்வியகத்தின் நிறுவனர் மற்றும் தலைவருமாகிய, முனைவர் மு. முத்தமிழ்ச்செல்வன் அவர்கள் இவ்வியக்கத்தின் நோக்கங்களை விளக்கினார். தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் மெய்யியல் துறைப் பேராசிரியர் முனைவர் கோ.பு. நல்லசிவம் அவர்கள் தமிழ் மொழி மூலம் அறிவியல் கற்பித்தலின் அவசியத்தைப் பகிர்ந்து கொண்டார்.

## நைஜீரியப் பேராசிரியர்க்குப் பயிற்சி



சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை ஒட்டுண்ணியல் துறையில் ''ஒட்டுண்ணி நோய்களைக் கண்டறிதல், அணுத்திரள்பண்புகள்,இரத்தவியல்மற்றும்உயிர்வேதியியல்''குறித்த பன்னாட்டுப் பயிற்சி, நைஜீரியாவின் இபடான் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர் டாக்டர் அதேடுஞ்ஜி வெரோனிகா எயிகுரி அவர்களுக்கு 02.02.2015முதல் 17.05.2015வரை அளிக்கப்பட்டது. துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் பாஸ்கரன் ரவி லதா அவர்கள் பயிற்சி இயக்குநராகவும், மையச் சிகிச்சையியல் ஆய்வகப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் எஸ். வைரமுத்து அவர்கள் பயிற்சியின் இணை இயக்குநராகவும் செயல்பட்டனர். பயிற்சியின் முடிவில் கல்லூரி முதல்வர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள் சான்றிதழ் வழங்கினார்.

## பயிற்சி ஐஏஎஸ் அதிகாரிகள் வருகை



9 பயிற்சி ஐஏஎஸ் அதிகாரிகள் (2013 ஆண்டு), தங்கள் பயிற்சியின் ஒரு பகுதியாகத் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் மற்றும் அதன் பல்வேறு பிரிவுகளை 12.06.2015அன்று பார்வையிட்டனர். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் தமிழ்நாடு அரசின் பல்வேறு சமூக நலத் திட்டங்களில் பல்கலைக்கழகத்தின் பங்கு மற்றும் பணி குறித்து விளக்கிக்கூறி, அவர்களுடன் கலந்துரையாடினார். பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் தி.ஜெ. ஹரிகிருஷ்ணன் அவர்கள் பல்கலைக்கழகத்தின் கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கப் பணிகள் குறித்து எடுத்துரைத்தார். பல்கலைக்கழக அதிகாரிகள் தங்கள் இயக்குநரகத்தின் பணிகள் குறித்து விளக்கமாக எடுத்துக்கூறினர்.

## நடமாடும் கால்நடை மருத்துவச் சேவைப் பிரிவு – துவக்க விழா



பின்தங்கிய கிராமங்களில் கால்நடை மருத்துவச் சேவை அளிக்கும் வகையில் திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் பயிற்றுவிக்கும் கால்நடைச் சிகிச்சையியல் வளாகத்தில் புதிதாக நடமாடும் கால்நடை மருத்துவச் சேவைப் பிரிவு துவக்கப்பட்டுள்ளது. இச் சேவைப் பிரிவைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் 07.05.2015அன்று கல்லூரி வளாகத்தில் துவக்கிவைத்தார். இந்நிகழ்ச்சியில் கல்லூரி முதல்வர் முனைவர் சே. பிரதாபன் மற்றும் கல்லூரிப் பேராசிரியர்கள் பங்கேற்றனர்.

## இறைச்சி அறுவைக்கூடம் – திறப்பு விழா



தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் பல்கலைக்கழக ஆராய்ச்சிப் பண்ணையில் ரூபாய் 4.80 இலட்சம் செலவில் சுழற்சி நிதித் திட்டத்தின் கீழ் இறைச்சி அறுவைக் கூடம் நிறுவப்பட்டுள்ளது. இதனைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் 13.05.2015 அன்று திறந்து வைத்தார்கள். நிகழ்ச்சியில் அனைத்துப் பல்கலைக்கழக அதிகாரிகள், பேராசிரியர்கள், ஆசிரியர் மற்றும் பணியாளர்கள் பங்கேற்றுச் சிறப்பித்தார்கள்.

## துணைவேந்தர் பார்வையிடல்

தமிழ்நாடு அரசு, தமிழகத்தின் மாட்டினங்களில் ஒன்றான பர்கூர் மாட்டினத்தை அழிவிலிருந்து காத்திடும் பொருட்டு பர்கூர் மாட்டின ஆராய்ச்சி நிலையத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள 50 ஏக்கர் நிலத்தைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் 30.05.2015அன்று பார்வையிட்டார். இந்நிகழ்வில் ஈரோடு மாவட்ட ஆட்சியர் டாக்டர் எஸ். பிரபாகர் இ.ஆ.ப., பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் தி.ஜெ. ஹரிகிருஷ்ணன், பல்கலைக்கழகத்தின் கால்நடை உற்பத்திக் கல்வி மைய இயக்குநர் முனைவர் ம. பாபு மற்றும் அதிகாரிகள் உடன் இருந்தனர்.

Posted on 29.06.2015 at Pathrika channel, EGMORE, RMS
Date of publication : 26.06.2015

Licensed to post without prepayment No.TN/PMG/(CCR)/WPP-708/15-17
Registration No.TN/TBM/32/2015-17

Registered with Registrar of Newspapers for India No.TN TAM/2001/5254
Posted at Pathrika Channel, Egmore RMS, Chennai - 8.
Printed and Published by
Dr. S.A. Asokan, Ph.D., Director of Distance Education
on behalf of Tamil Nadu Veterinary and Animal Sciences University
and Printed at University Publication Division, Madhavaram Milk Colony,
Mathur Road, Ambathur Taluk, Tiruvallur District, Chennai - 600 051
**Editor : Dr. S.A. Asokan, M.V.Sc., Ph.D., Phone : 044-2555 4411**
**E-mail : dde@tanuvas.org.in**

## மாணவர்களுக்குப் பன்னாட்டுப் பயிற்சி



அமெரிக்காவின் விர்ஜினியா மேரிலாண்ட் கால்நடை மருத்துவக் கல்லூரிக்கும் பல்கலைக்கழகத்திற்கும் ஏற்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் காரணமாக பல்கலைக்கழகத்தின் நான்கு மாணவர்கள்: கே. ராஜமாணிக்கம், மீரா ரமேஷ், புவனா ப்ளக்கோட் மற்றும் போஸ்கோ ஜோஸ் ஆகியோர் விர்ஜினியா மேரிலாண்ட் கால்நடை மருத்துவக் கல்லூரியில் 01.04.2015 முதல் 16.05.2015 வரை புறநிலைப் பயிற்சி மேற்கொண்டனர்.

## நாட்டுநலப் பணித் திட்டம்

ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் நாட்டுநலப் பணித் திட்டப் பிரிவுமூலம் ஒரு சிறப்பு முகாம், கோவிலூரில் 28.04.2015முதல் 04.05.2015வரை நடத்தப்பட்டது. 09.04.2015அன்று நடைபெற்ற கால்நடைச் சிறப்பு நல முகாமில் 141 கால்நடைகளுக்குச் சிகிச்சையளிக்கப்பட்டு, 50 பண்ணையாளர்களுக்குத் தனுவாஸ் தாதுஉப்புக் கலவை விநியோகிக்கப்பட்டது. முகாமில் பால் மற்றும் இறைச்சிப் பொருட்கள் தயாரிப்பு குறித்த செயல்முறை விளக்கம், பொதுவிடங்களைத் தூய்மைப்படுத்துதல், மரக் கன்று நடுதல், மாணவர்களுக்கான ஆளுமைத் திறன் மேம்பாடு, மரபுசார் அறிவை ஆவணப்படுத்துதல் ஆகிய பணிகள் செயல்படுத்தப்பட்டன.

## தேசிய மாணவர் படைப் பணி

சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் தேசிய மாணவர் படைப் பிரிவின்மூலம் யோகா பயிற்சி முகாம் 24.04.2015 முதல் 08.05.2015வரை நடைபெற்றது. கல்லூரியின் தேசிய மாணவர் படைப் பிரிவைச் சார்ந்த 95 மாணவர்களும், பிற கல்லூரிகளின் 76 மாணவர்களும் இதில் பங்கேற்றனர்.

## பணி ஓய்வு



சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் உறைவிடக் கால்நடை மருத்துவச் சேவைப் பிரிவின் உறைவிடக் கால்நடை மருத்துவ அலுவலர் முனைவர் ஜி. தனஞ்செய ராவ் அவர்கள் 31.05.2015அன்று பணி ஓய்வு பெற்றார். 01.06.1955இல் பிறந்த இவர் 20 ஆண்டும் 11 மாதமும் பணியாற்றியுள்ளார்.



சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் முதல்வர் அலுவலகத்தின் கணக்கியல் அலுவலர் திருமதி வி. கனகமணி அவர்கள் 31.05.2015அன்று பணி ஓய்வு பெற்றார். 14.05.1957இல் பிறந்த இவர் 34 ஆண்டும் 03 மாதமும் பணியாற்றியுள்ளார்.



பல்கலைக்கழகத்தின் நிதி அலுவலகத்தின் கணக்கியல் அலுவலர் திருமதி எம். வசந்தா அவர்கள் 31.05.2015அன்று பணி ஓய்வு பெற்றார். 05.05.1957இல் பிறந்த இவர் 31 ஆண்டும் 05 மாதமும் பணியாற்றியுள்ளார்.



பல்கலைக்கழகத்தின் பதிவாளர் அலுவலகத்தின் கண்காணிப்பாளர் திரு. ஏ. நாதன் அவர்கள் 31.05.2015அன்று பணி ஓய்வு பெற்றார். 18.05.1957இல் பிறந்த இவர் 24 ஆண்டும் 04 மாதமும் பணியாற்றியுள்ளார்.



மாதவரம் பால்பண்ணை, பல்கலைக்கழக ஆராய்ச்சிப் பண்ணையின் உடனாள் திரு. எஸ். நீலகண்டன் அவர்கள் 31.05.2015அன்று பணி ஓய்வு பெற்றார். 19.05.1955இல் பிறந்த இவர் 16 ஆண்டும் 07 மாதமும் பணியாற்றியுள்ளார்.



சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் உழவியல் துறையின் உடனாளர் திரு. எம். நாகராஜன் அவர்கள் 31.05.2015அன்று பணி ஓய்வு பெற்றார். 15.05.1957இல் பிறந்த இவர் 25 ஆண்டும் 02 மாதமும் பணியாற்றியுள்ளார்.



நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடை உயிர் வேதியியல் துறையின் உடனாளர் திரு. ஏ. மாதப்பன் அவர்கள் 31.05.2015அன்று பணி ஓய்வு பெற்றார். 11.05.1957இல் பிறந்த இவர் 27 ஆண்டும் 01 மாதமும் பணியாற்றியுள்ளார்.

### முகவரி மாற்றம்

மாதவரம் பால்பண்ணை, தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் தலைமை நிலையத்தில் (உழவர் இல்லம்) இயங்கிவந்த பல்கலைக்கழகத் தொலைநிலைக் கல்வி இயக்ககம் கீழ்க்கண்ட முகவரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது:

**தொலைநிலைக் கல்வி இயக்ககம்**
தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்
பு.எண். 485, ப.எண். 327,
அண்ணாசலை, நந்தனம், சென்னை – 600 035.